தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, தை 26

2011 பிப்ரவரி 9, புதன்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்– தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங் கில்."

காரணத்தைத் தெளிவாக அறிந்து ஒன்றைச் சொல்ல வேண்டும். அந்தச் சொல் வன்மையைப் போன்ற அறமும், உண்மைப் பொருளும் வேறெதுவும் இல்லை.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

31—

நீதிமன்றம்

***610—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 9

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் ஆகியவை துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கண்ட நீதிமன்றங்கள் 23–2–2008 முதல் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மாவட்டக் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் ஆகியவை தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அதற்காக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நீதிமன்றம் வழங்கப்பட்டபோதே, அவற்றுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்கான நிதி ஒதுக்கப்பட்டும் இதுவரை கட்டடங்கள் கட்டப்படாமல், டெண்டர் விடப்படாமல் இருக்கின்றது. உடனடியாக கட்டடம் கட்டுவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்காக அரசு 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இடப் பிரச்சினையால் சற்று காலதாமதம். கல்வித் துறைக்குச் சொந்தமான இடத்தை மாற்றிப் பெறுவதிலே அந்தக் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இப்போது நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான நிலத்தை கல்வித் துறையிடமிருந்து அரசு எடுத்திருக்கிறது. விரைவில் டெண்டர் விடப்பட்டு, கட்டடங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 பிப்ரவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.*

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.*

திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் இயங்கிவரும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள இரண்டு அறைகளிலே இயங்கிவருகிறது. இது மிகவும் பழமையான இடம். அங்கே 40 வழக்கறிஞர்களுக்கு மேல் பணியாற்றி வருகிறார்கள். வழக்கறிஞர்கள் உட்காருவதற்குக்கூட அங்கே இடம் இல்லை. எனவே, சீர்காழி நகரில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் பழமையான கட்டடத்தை மாற்றி புதிய கட்டடம் கட்டிக் கொடுத்தால், ஒருங்கிணைந்த நீதிமன்றமாக இயங்குவதற்கும், வழக்கறிஞர்கள் பணியாற்றுவதற்கும் உதவியாக இருக்கும். எனவே, சீர்காழி நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை, நல்ல யோசனை, வரவேற்கத்தக்கது. அடுத்த நிதியாண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கு நிதியினைத் தருவார்கள். நிச்சயம் கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.*

திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டமாக இருந்தபோது, கிருஷ்ணகிரியில் நுகர்வோர் நீதிமன்றம் செயல்பட்டுக்கொண்டிருந்தது. மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தற்போது தருமபுரி,*

கிருஷ்ணகிரி என இரண்டு மாவட்டங்களாக செயல்படுகின்றது. தற்போது தருமபுரியில் நுகர்வோர் நீதிமன்றம் இல்லாத காரணத்தினால் எல்லோரும் கிருஷ்ணகிரிக்கு செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, தருமபுரியில் நுகர்வோர் நீதிமன்றமும், தொழிலாளர் நீதிமன்றமும் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்குத்தான் கடைசி நாள். இன்றைக்கு அதற்கு முதல் நாள். உறுப்பினர்கள் மனவருத்தத்தோடு போகக்கூடாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.*

முற்பகல் 9–35

திரு. கோ. அரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூரில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கு, கடந்த ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே அறிவிக்கப்பட்டு, அதற்கான செயல்பாடுகள் எல்லாம் தொடங்கப்பட்ட நிலையில், ஆட்சி மாற்றத்தின் காரணமாக, அந்தப் பணிகள் தொய்வு அடைந்த நிலையிலே இருக்கின்றன. கடந்த இரண்டு வருடங்களாக திருவள்ளூரிலே வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தியும்கூட, இதுவரை இந்த அரசு கண்டும் காணாமலும் இருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததனாலோ, என்னவோ தெரியவில்லை. அந்தப் பகுதி மக்களுடைய நலனுக்காகவும், வழக்கறிஞர்களின் நலனுக்காகவும் உடனடியாக திருவள்ளூரில், மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

2011 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அம்மா என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் எங்கள் அய்யா என்ன செய்திருக்கிறார் என்று கேட்டீர்கள் என்றால், திருவள்ளூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்காக, 7 கட்டடங்கள் மற்றும் இரண்டு நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்குமான கருத்துரு உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் இருந்து செயற்குறிப்பு பெறப்பட்டு இப்போது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் நிதியொதுக்கம் பெற்று பணிகள் நடைபெறும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.*

திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், தரங்கம்பட்டியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அறிவித்தார்கள். அதற்குத் தேவையான முன்மொழிவுகள் அனைத்தும் அரசிற்கும் உயர் நீதிமன்றத்திற்கும் அனுப்பப்பட்டுவிட்டன. அதனுடைய நிலைமை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *குறிப்பாக, சிறப்பாக அதைக் கேட்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரத்தைச் சேகரித்து உடனடியாகத் தெரிவிக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

32—

தொழில்நுட்பக் கல்லூரி

***104968—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—